திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எல்லா ஏரிகளின் உள்வாயில்களிலும் ஆக்கிரமிப்பு நிகழ்ந்திருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளின் விளைவாக ஏரி களில் நிற்கக் கூடிய தண்ணீரின் அளவு குறைந்து விவசாயத்திற்கு பாசனத்திற்கு போதுமான நீர் கிடைக்கவில்லை என்ற புகார் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கிறது. ஆகவே அரசாங் கம் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இப்போது ஏரி, குளங் களின் உள் வாயில்களில் ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அதை அகற்றி வனத்துறையிடம் நாம் ஒப்படைத்து விடுகிறோம். அவர் கள் அந்த உள் வாயில்களில் கருவேல மரம் போன்றவற்றைப் பயிரிடுகிறார்கள். அதன் பிறகு விவசாயிகள் உள்ளே வந்து ஆக்கிரமிப்பதற்கு வாய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத் தட்ட 30 சதவீதம் குளங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பருவ காலத்தி லேயும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

சக்தி—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகள்

*வினா எண். 238 —திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் தாலுகா சக்தி —தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் முகாம்களில் (செட்டில்மெண்டுகள்) வசித்து வருகிற ஆதிவாசிகளுக்கு கல்வி உறைவிடப்பள்ளி, சுகாதாரம், குடிநீர் கிணறுகள், மின்விளக்கு கள், கூட்டுறவு கடனுதவி போன்ற எந்த வசதியுமில்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆமெனில் மேற்படி வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; (அ) இதுபற்றிய விவ ரங்கள் சேகரிகபட்டுள்ளன.

(ஆ)க்அ சியமான தேவைகளைச் செய்து கொடுக்க தக்க நடவடிகைகுத்யுவகாள்ளப்படும்.

1983 மார்ச் 7]

திரு. கு. ரமனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடும் நாட்களாக சத்தியமங்கலம் வனசரகப் பகுதிகளில் வசித்து வரும் ஆதிவாசிகளுக்கு, நான் கேட்டுள்ள கேள்வியில் சொல்லப்பட்டுள்ள வசதிகள் இல்லாமல் இருந்து வருவதை ஏன் அங்கே இருக்கிற அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவில்லை. இந்த அசட்டையான நிலைக்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்னதைப்போல இந்த பகுதிகளில் இருக்கக்கூடிய ஆதிவாசிகளுக்கு பல பிரச்னைகள் இருப்பதை உணர்ந்திருக்கிறோம். ஆனால் அதிகாரிகள் ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்று கேட்கிறார்கள். அதன் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு என்னென்ன பிரச்னைகள் இருக்கின்றன என்பதை கேள்வியில் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகளுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் நமது அரசாங்கம் செய்யவேண்டிய உதவிகள் மற்றும் எடுக்க வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்காக மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட பணத்தை சட்டப்பூர்வமாக தரவேண்டிய கடமையில் இருக்கிறார்களா? இல்லையா? அது இந்த அரசிற்கு கிடைக்கிறதா? இல்லையா? அப்படி கிடைக்கும்போது, இப்படிப்பட்ட இடங்களில் அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், எப்படி அவர்களுக்கு அந்தப் பணம் தொடர்ந்து கிடைக்கும்? அதனால் இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக உடனடியாக ஒரு அறிக்கையைப்பெற்று நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொன்ன அந்த பகுதிகளுக்கு அண்மையில் நான் சென்றிருந்த போது நிலைமைகளை நேரில் கண்டிருக்கிறேன். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இது குறித்து தெரிவித்து இத்தகைய பிரச்சனைகள் எழாத வகையில் தமிழகம் முழுவதும் ஆதிவாசிகள் வசிக்கக் கூடிய மலைப் பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று அரசு அறிவுறுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய சர்க்கார் உதவி கிடைக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அது குறித்த பதில் இருந்தால் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கலாம்,

[1983 மார்ச் 7

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஏற்கெனவே ட்ரைபில் டெவலப்மெண்ட் புரோகிராமில் (ஐ.டி.டி.பி.) தமிழகத்தில் ஒன்பது பகுதிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த பகுதிகள் அதில் வரவில்லை. தேர்வு செய்யப்படுகிற பகுதிகளுக்குத் தான் மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும் அதிகமான தொகை அளிக்கப்பட்டு அங்கே தேவைப்படுபவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பகுதிகளில் இருக்கிற பிரச்னைகளை அரசு தனியாக ஆராய்ந்து ஆவன செய்யும்.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம்—தலைமலை பகுதிகளில் வசிக்கிற ஆதிவாசிகளுக்காக இப்போது ஐந்து உறைவிடப் பள்ளிகள் நடந்து வருகின்றன. ஒரு நடுநிலைப் பள்ளியும் அவர்களுக்காக நடக்கிறது. ஆசனூரில் இருக்கிற அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கை அரசிற்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடன் நான் அந்த பகுதிகளுக்கு சென்றிருந்த போது அவர்கள் இந்த கோரிக்கையை என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அரசு இது குறித்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது விவரங்களை சேகரிக்கிறேன் என்று சொன்னார்கள். குறிப்பாக நான் கேட்க விரும்புவது, சத்தியமங்கலம் தாலுக்கா, சத்தியமங்கலம் தலைமலை பகுதிகளில் இருக்கிறமலைவாழ் மக்களுக்கு தற்போது குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற சத்திய மங்கலம் வட்டத்தில் எட்டு செட்டில்மெண்டுகளை குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எட்டு செட்டில்மெண்டுகளில் தற்போது இருக்கக்கூடியவர்கள் ஆறு செட்டில்மெண்டுகளில்தான் இருக்கிறார்கள் என்று என்னிடத்தில் விவரமான அறிக்கை தரப்பட்டுள்ளது. குடிதண்ணீர் பிரச்னை பொறுத்தவரையில், அங்கே ஒரு சில இடங்களில் குடிதண்ணீர் வசதி இல்லை என்று தகவல் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன்.